உ
கணபதிதுணை.

திருச்செந்தினிரோட்டக
யமகவந்தாதி.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

யாழ்ப்பாணத்திற்

சைவப்பிரகாசவித்தியாசாலைக்கதிபதியாகிய

நல்லூர்

ஆறுமுகநாவலரால்

செய்யப்பட்டவுரையுடன்

தமதுவித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ௵ பங்குனி ௴

இதன்விலை- அணா-௩.

உ கணபதி துணை.

திருச்செந்திலந்தாதி.

மூலமும் உரையும்.

காப்பு.

கொற்றவருணனை நின்றுழக்கிக் கொக்குருவைச்
செற்றவருணனையன்ன செவ்வேற்படைச்செந்திலர்க்கு
முற்றவருணனையந்தாதியென் றுமுதிர்மதப்பேர்
பெற்றவருணனையானனத்தாதியைப்பேசுவனே.

இதனது பதப்பொருள். அன்று-(யுத்தஞ்செய்த) அக்காலத்து-கொற்றம்-வெற்றியையுடைய-வருணனை-சமுத்திரராசனை-நின்று (கடலிடத்தே) நின்று-உழக்கிய-கலக்கிய-கொக்குருவை-மாமரவடிவாகிய சூரபத்மனை-செற்ற-கொன்ற-அருணனை-சூரியனை-அன்ன-போன்ற-செவ்வேற்படை-சிவந்தவேலாயுதத்தையுடைய-செந்திலர்க்கு-திருச்செந்தூரில்வாழும் முருகக்கடவுளுக்கு-(நான்பாடத்தொடங்கும்)-வருணனை-வர்ணனையையுடைய-அந்தாதி-இந்நிரோட்டகயமகவந்தாதியானது-முற்ற (இடையூறின்றி) முடியும்பொருட்டு என்றும் எக்காலத்தும்-முதிர்-முதிர்ந்த-மதப்பேர்-மதநீரென்று உலகத்தார் சொல்லும்பெயரை-பெற்ற-படைத்த-அருண்-அருள்வெள்ளமானது-நனை-தோன்றிநனைக்கப்பெற்ற-ஆனனத்து-யானைமுகத்தையுடைய-ஆதியை-கணபதியை-பேசுவன்-(யான்) துதிப்பேன்-எ-று ❁ ஏ-ஈற்றசை-அந்தாதியானதுமுடியும்பொருட்டுக் கணபதியைத்துதிப்பேனெனக் கூட்டுக. நிரோட்டகயமகவந்தாதி-நிரோட்டகமும் யமகமுமாகப் பாடப்படும் அந்தாதி. நிரோட்டகமாவது-இதழ்முயற்சியாற்பிறக்கும்மெய்யும் உயிரும்உயிர்மெய்யும்வாராமற் பாடப்படுவது. யமகமாவது-அடிமுதலெழுத்தோடு-இரண்டெழுத்துமுதற் பத்தெழுத்தீறாக ஓரடிபோல நாலடியும் பாடப்படுவது. இப்பிரப

ந்தத்தின் முதலிலே தனித்து நிற்கும் இக்காப்புச் செய்யுள்-நிரோட்டகமுமன்று யமகமுமன்று-திருக்கெனக் கண்டுகொள்க. திருக்காவது-அடிமுதலெழுத்தொழித்து இரண்டெழுத்து முதற் பன்னிரண்டெழுத்தீறாகஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது. *

யானைக்கண்டங்கரிசென்றேத்தெழிற்செந்திலின்றடைந்தே *
யானைக்கண்டங்கரியற்கங்கயிலையையேந்ததகை *
யானைக்கண்டங்கரிசேரெண்டிக்காக்கினற்கீநலிசை *
யானைக்கண்டங்கரிதாகியசீர்க்கதியெய்தினனே. *

(இ-ள்.) யானைக்கண்- வெள்ளையானையின்மேல்-தங்கு இருக்கின்ற-அரி-இந்திரன்-சென்று-போய்-ஏத்து-துதிக்கும் எழில்-அழகினையுடைய-செந்தில்-திருச்செந்தூரை-இன்று-இன்றைக்கு-அடைந்து-சேர்ந்து-யான்-நான்-ஐக்கண்டம்-அழகையுடைய கழுத்து-கரியற்கு-கரிதாகப்பெற்றவருக்கு-அங்கயிலையை- அழகிய கைலாசகிரியை-ஏந்த-போன்ற-தகை- பெருமையையுடைய-ஆன்- இடபத்தை வாகனமாகக்கொண்ட-ஐக்கு-கடவுளுக்கு-அண்டப்-அண்டங்களையும் கரி-அஷ்டகஜங்கள்-சேர்-பொருந்திய-எண்டிக்கு- அஷ்டதிக்குக்களையும்- ஆக்கினற்கு-சிருஷ்டித்தவருக்கு- ஈ-பிரணவப்பொருளையுபதேசித்தருளிய-நலிசையானை-நன்மையாகிய கீர்த்தியையுடைய சுப்பிரமணியஸ்வாமியை-கண்டு-தரிசித்து-அங்கு-அவ்விடத்தே-அரிதாகிய-யாவர்க்குங்கிடைத்தற்கரியதாகிய-சீர்-சிறப்பையுடைய-கதி-மோக்ஷத்தை-எய்தினன்- அடைந்தேன்-என்று ❋சுப்பிரமணியசுவாமியைத் தரிசித்து மோக்ஷத்தையடைந்தேனெனக் கூட்டுக. (க)

தினகரனந்தநனியிலங்காநின்றசெய்யநற்செந் *
தினகரனந்தநிதியாயினனடற்சீரயிலேந் *
தினகரனந்தகனைச்செற்றதாளர்திகழ்கனகர் *
தினகரனந்தரடனார்தனையனென்சிந்தையனே. *

(இ-ள்.) தினகரன்-சூரியன்-நந்த- ஒளிகுன்றும்படி- நனி-மிக-இலங்காநின்ற- பிரகாசிக்கின்ற-செய்ய- செவ்வையாகிய-நல்-நல்ல-செந்தினகரன்- திருச்செந்திலென்னும் நகரத்தையுடையவரும்-நந்தம்-நம்முடைய-நிதியாயினவரும்- அடல்-வலிமையுடைய-சீர்-சிறப்பாகிய-அயில்-வேலாயுதத்தை-ஏந்தின-தரி

ந்த-கரன்-கையையுடையவரும்-அந்தகனை-இயமனை-செற்ற-வதைத்த-தாளர்-பாதங்களையுடையவராகியும்-திகழ்-விளங்குகின்ற-கனபாரத்தையுடைய-காதில்-செவிகளிலே-நகர்-அசைகின்ற-அனந்தன்-அனந்தனாகிய குண்டலத்தையுடைய-நடனர்-நடேசராகியிருக்கின்ற பரமசிவனுடைய-தனயன்-குமாரருமாகிய முருகக்கடவுளானவர்-என்சிந்தையகன்-என்மனத்தின்கணிருக்கின்றனர்-எ-று. (௨)

சிந்தனையாகத்திசையந்தணர்க்கிறைசேரகங்க *
சிந்தனையாகத்தரையளித்தாளைச்சென்றிரந்த *
சிந்தனையாகத்திடையியைந்தான்றந்தசேயளியாற் *
சிந்தனையார்கத்தநற்செந்திலாய்நினைச்சேர்ந்தனனே. *

(இ-ள்.) சிந்தனை-தங்கள்மனமானது-யாகத்து-வேள்வியின்கணே-இசை-பொருந்தப்பெற்ற-அந்தணர்க்கு-பிராமணர்கட்கு-இறை-தலைவரே-சேர்-பொருந்திய-அகம்-மனம்-கசிந்து-கசிந்து-அனையாக-மாதாவாக-தரை-இப்பூமியை-அளித்தாள்-பெற்ற உமாதேவியையும் சென்று-மாவலிச்சக்கிரவர்த்தியிடத்திலேபோய்-தரை-பூமியை-இரந்த-யாசித்த-சிந்தனை-வாமனரூபத்தையுடைய விஷ்ணுமூர்த்தியையும்-ஆகத்திடை-தமதுதிருமேனியிலே-இயைந்தான்-இடப்பாதியும் வலப்பாதியுமாகக்கொண்ட பரமசிவன்-தந்த-பெற்ற-சேய்-குமாரரே-அளியால்-கிருபையினால்-சிந்து-சமுத்திரத்தை-அனையார்-போன்றவரே-கத்த-கருத்தாவே-நற்செந்திலாய்-நன்மையாகிய திருச்செந்தூரையுடையவரே-நினை-உம்மை-சேர்ந்தனன்-யான் வந்து அடைந்தேன். எ-று. என்னைக் காத்துக்கொள்ளுமென்பது-எஞ்சிநின்றது.- அன்னை நின்னை என்பன அனை நினை என இடைக்குறைந்து நின்றன. (௩)

தனத்தலங்காரநிறைநாரியரந்தரத்தசைகே *
தனத்தலங்காரநிகழரங்காடச்செய்தன்னினையத் *
தனத்தலங்காரதராவியங்கந்தக்கதண்செந்திற்கந் *
தனத்தலங்காரனையானையனேத்திடத்தங்கினனே. *

(இ-ள்.) தனத்து-முலையினிடத்து-அலங்கு-அசைகின்ற-ஆரம்-முத்துமாலைகள்-நிறை-நிறையப்பெற்ற-நாரியர்-பெண்கள்-அந்தரத்து-ஆகாயத்திலே-அசை-அசைகின்ற-கேதனத்து-கொடிகளையுடைய-அலங்காரம்-அழகு-நிகழ்-விளங்குகின்ற-அரங்கு-சபையின்

கண்ணே-ஆட-நடிக்கவும்-செந்தமிழ்-வயல்களிலே-நயந்த-சுகந்தம் தடங்களாகிய-நத்து-சங்குகள்-அலம்-சலப்பசலென்றேநிற்கின்ற-கார்-சலமானது-அதரா-வழியாக-இயங்க-அதிலூர்ந்துசெல்லவும்-தக்க-தகுந்த-தண்செந்தில்-குளிர்ச்சியையுடைய திருச்செந்தூரில்வாழும்-கந்தன்-கந்தசுவாமியானவர்-அத்தலம்-அந்தஸ்தலத்தினிடத்தே-காரணமான்-மேகம்போலும் வண்ணமூர்த்தியும்-அயன்-பிரமதேவரும்-ஏத்திட-துதிக்க-தங்கினன்-இருந்தருளினார். எ-று. அலம்-ஆகுபெயர். (௪)

தங்கந்தனக்கனடைத்தனியெனைத்தன்னியங்கே *
தர்கந்தனக்கடரச்சென்றனரதிர்தாரிலைகா *
தட்கத்தனைக்கலலர்காக்களூழிற்றண்செந்திலார் *
தங்கந்தனங்கதிகட்செக்கர்செய்சஞ்சலத்தினையே. *

(இ-ள்.) தனங்கள்-எம்முலைகள்-தங்கம்-பொன்போலுந்தேமலை-அடைய-பொருந்த-தனி-தனியாக-எனை-என்னை-தள்ளி-இவ்விடத்திலேவிட்டுப்பிரிந்து-அங்கே-தாம்போன அவ்விடத்தில்-அங்கு-இருக்கின்ற-அந்தணர்கள்-அழகிய திரவியங்களை-தரக்கொண்டுவரும்பொருட்டு-சென்றனர்-போன என்னுடைய நாயகர்-அறிந்தாரில்லை-உணர்ந்தாரில்லை-காதம்-ஓர்காததூரம்-கந்தம்-மணம்வீசுகின்ற-நம்-நம்முடைய-கள்-தேனையுடைய-அலர்-பூக்கள்-காக்கும்-நந்தனவனங்களிலே-ஆர்-நிறைந்திருக்கப்பெற்ற-எழில்-அழகையுடைய-தண்-குளிர்ச்சியையுடைய-செந்திலார்தம்-திருச்செந்தூரில் வசிக்கின்றவர்களுடைய-கந்தன்-கந்தசுவாமியினது-அங்கம்-திருமேனியை-நிகர்-போலும்-செக்கர்-இச்செவ்வானம்-செய்-எனக்குச்செய்கின்ற-சஞ்சலத்தினை-துக்கத்தை. எ-று. நாயகர் துக்கத்தைத உணர்ந்தாரில்லையெனக் கூட்டுக. [தலைவன்பிரிந்துழித் தலைவிமாலைகண்டிரங்கல்.] (௫)

சலத்தரனுகந்தரித்தார்தந்தாதன்றனதிடைச்சஞ் *
சலத்தரஞ்சுந்தனைதடத்தாலெனைச்சார்ந்ததண்டன் *
சலந்தரனுகர்தளரச்செற்றோர்தனயன்றலத்தச் *
சலத்தரனுகத்தனக்கிறைசேர்செந்திற்சார்ந்திடற்கே *

(இ-ள்.) சலம்-கங்கையையும்-தரம்-தலைமாலையையும்-நாகம்-சர்ப்பத்தையும்-தரித்தார்-தரித்தவரும்-தம்-தம்முடைய-தாதன்றனதிடை-அடியாராகியமார்க்கண்டரிடத்திலே-சஞ்சலம்-துக்கத்தை-தர-

நெடித்தம்பொருட்டு-நாகம்-யானையானது-தரை-பூமியிலே-நடந்தாலென-நடந்தாற்போல-சார்ந்த-சேர்ந்த-தண்டம்-இயமனையும்-சலந்தரன்-சலந்தரனையும்-ஆகம்-உடலம்-தளர-சோரும்படி-செற்றூர்-செற்றவரும் ஆகிய பரமசிவனுடைய-தனயன்-குமாரராகியும்-தமழ்-மேன்மையையுடைய-நாகந்தனக்கு-மலைதனக்கு-இறை-தலைவராகியும் இருக்கின்ற முருகக்கடவுள்-சேர்-வீற்றிருக்கும்-செந்திலில்-திருச்செந்தூராகிய-தலம்-தலத்தை-சார்ந்திடற்கு-அடைதற்கு-நச்சலும்-யாம்விருப்பிறேமில்லை-எ-று. (௬)

சாரங்கஞ்சங்கரிகட்கிச்சித்தேய்ந்தகைச்சங்கரனார் *
சாரங்கஞ்சங்கரிதாஞ்சக்கரங்கையிற்றாங்கினன்சேய் *
சாரங்கஞ்சங்கரியாநண்ணினர்க்கந்தந்தந்திரத்தா *
சாரங்கஞ்சங்கரிதேயெனச்செய்நின்சரண்டந்ததே. *

(இ-ள்.) சாரங்கம்-மானானது-சங்கரி-உமாதேவியினது-கட்கு-கண்ணினதழகுக்கு-இச்சித்து-விரும்பி-ஏய்ந்த-வந்திருந்தாற்போலப்பொருந்திய-மக-கையையுடைய-சங்கரனார்-சங்கரரும்-சாரங்கம்-சார்ங்கமென்னும்வில்லையும்-சங்கு-சங்கையும்-அரிதாம்-அரிதாகிய-சக்கரம்-சக்கரத்தையும்-கையில்-கையிலே-தாங்கினன்-தரித்தவிஷ்ணுமூர்த்தியுடைய-சேய்-புதல்வனாகிய மன்மதனுடைய-சார்-பொருந்திய-அங்கம்-உடலத்தை-சங்கரியா-கொன்று-நண்ணினர்க்கு-முன்போல யோகத்திருந்தவருமாகிய பரமசிவனுக்கு-அந்தம்-வேதத்தின்முடிவாகிய-தந்திரத்து-சைவாகமத்தினது-ஆசாரம்-சீலத்தை-கஞ்சம்-செந்தாமரைமலரும்-சரிதேயென-சரிதென்று சொல்லும்படி-செய்-செய்கின்ற-நின்சரண்-உம்முடையபாதம்-தந்தது-கொடுத்தது-எ-று. இரண்டாமடியிலே சார்ங்கமென்பது எதுகைநோக்கிச் சாரங்கமென ஓரகாரம் விரியப்பெற்றுநின்றது. (எ)

தந்தனஞ்சங்கையணிகரர்சேர்க்கத்தடங்கணலை *
தந்தனஞ்சங்கையலவென்செய்யாடங்கச்சற்சனர்நித் *
தந்தனஞ்சங்கையகலறந்திசெந்திற்சார்க்தனித் *
தந்தனஞ்சங்கையநகனிளையனற்குடரர்க்கே. *

(இ-ள்.) சங்கை-சங்குவளையலை-அணி-அணிந்த-கரர்-கையினையுடையபெண்கள்-தந்தனம்-தங்கள் முலைகளிலே-சேர்க்க-புணர்க்க-தடங்கண்-அவர்களுடையவிசாலமாகியகண்களிலே-அலைதந்தன

ம்-யாம் அடைந்தோம்-(இனி)-சம்-அவர்களோடனுபவிக்குஞ்சுக
த்தை-கை-நீறுத்துவிடு.-அலர்-இதனாலுண்டாகும்பழிமொழி எ
ன்-நமக்குரான்.-செய்யாள்-இலக்குமி-தங்கு-வசிக்கு-சற்சனர்-சன்
மார்க்கமுடைய சனங்களுக்கு-நித்தம்-எப்பொழுதும்-தனம்-தி
ரவியங்களை-சங்கை-ஐயம்-அகல-நீங்கிய-அறத்து-தருமநெறியிலே-
ஈ-கொடு.-தனித்தந்தன்-ஒற்றைக்கொம்பையுடையவரும்-அஞ்சு-ஐ
ந்தாகிய-அங்கை-அழகியகையையுடைய-அநகன்-பாவமில்லாதவரு
மாகியவிநாயகக்கடவுளுடைய-இளையன்-தம்பியாராகிய சுப்பிரம
ணியஸ்வாமியானவர்-நற்றுள்-தம்முடையநன்மையாகியபாதங்களை-
நாற்கு-நமக்குத்தரும்பொருட்டு-செந்தில்-அவர்வீற்றிருக்குந்திரு
ச்செந்தூரை-சார்க-அடை.எ-று. (அ)

தரங்கனத்தாரனணியேற்றெழிற்செந்திற்றந்தைநிரந் *
தரங்கனத்தாரகநாடிவெஃகேறதிணைசத்தியரந் *
தரங்கனந்தாரநகரிச்சேய்கிரித்தையலர்க்கந் *
தரங்கனந்தாரளகஞ்சிற்றிடைசலசங்கண்களே. *

(இ-ள்.) தரங்கம்-கடற்றிரைகள்-தந்து-சங்குகளை-ஆரல்-மதிலி
ன்மேலே-தனி-மிக-ஏற்று-ஏற்றுகின்ற-எழில்-அழகையுடைய-செந்
தில்-திருச்செந்தூரில் வீற்றிருக்கும்-தந்தை-பிதாவாகியும்-நிரந்தர
ம்-எக்காலத்தும்-தாரகம்-பிரணவஸ்வரூபத்தை-நாடின்-விசாரிக்கில்-
கனம்-நமக்குமேன்மையாகும்-என்று-என்று-நினை-நினைக்கின்ற-ச
த்தியர்-மெய்ஞ்ஞானிகளுடைய-அந்தரங்கம்-அந்தரங்கத்திலே-நந்
தார்-கெடுதலின்றிவிளங்குகின்றவரும்-அநகர்-ஆணவமில்லாதவருமா
கிய-ஈசர்-பரமசிவனுடைய-சேய்-குமாரராகிய விளங்குகின்ற முருகக்
கடவுளுடைய-கிரி-மலையிலிருக்கும்-தையலர்க்கு-பெண்ணுக்கு-தா
ர்-மாலையையுடைய-அளகம்-அளகமானது-கனம்-மேகத்தைப்போ
லும்.-சிற்றிடை-சிறுமையாகிய இடையானது-அந்தரம்-ஆகாயத்தை
ப்போலும்.-கண்கள்-கண்களானவை-சலசம்-செந்தாமரை மலரை
ப்போலும். எ-று. [தலைவியினவயவம் புகழ்தல்.] (கூ)

சங்கங்கலங்கழனிக்கரைசேர்செந்திற்றங்கினதஞ் *
சங்கந்தளங்கரநன்னரன்சேயெய்தச்சார்ந்தனஞ்சந் *
சங்கங்களங்கனியைநிகர்தண்டதரற்கினிய *
சங்கங்களங்கரெனநின்றயாங்கணெஞ்சங்கரைந்தே *

(இ-ள்.) சங்கங்கள்-சங்குகள்-அம்- அழகையுடைய-கழனி-வயல் களினது-கரை-கரைகளிலே-சேர்-பொருந்திய- செந்தில்-திருச்செந்தூரின்கண்-தங்கினம்-இருந்தனம்:- நஞ்சம்-நஞ்சும்-கம்-தலையும்-களம்-கழுத்திலும் -கரம்-கையிலும்- நண்ண- இருக்கப்பெற்ற- அரன்-பரமசிவனுடைய-சேய்-குமாரராகிய முருகக்கடவுளை - எய்த- அடையும்பொருட்டு-சற்சங்கம்-சற்சங்கத்தை-சார்ந்தனம்-சேர்ந்தோம். - களங்கனியை- களாப்பழத்தை-நிகர்- போலும் தண்டதரற்கு- நிறத்தையுடைய இயமனுக்கு-இனி-இனி-அசங்கம்-அஞ்சோம்.-களங்கரென குற்றத்தையுடையவர்களாக-நின்ற-நின்ற- யாங்கள்- நாங்கள்-நெஞ்சம் மனம்-கரைந்து-உருகி. எ-று. நாங்கள் மனமுருகியிருந்தனமெனக் கூட்டுக. (௰)

கரத்தரிக்கங்கணங்கட்டரனார்தந்தகந்தரழ *
கரத்தரிக்கங்கணங்கண்டசெய்ச்செந்திலெங்காங்கெயர்சா *
கரத்தரிக்கங்கணங்கட்கயனார்க்கெழிற்காசணிசே *
கரத்தரிக்கங்கணங்கற்றிடத்தாங்கினர்கைச்சத்தியே. *

(இ-ள்.) கரத்து-கையிலே-அரி-சர்ப்பமாகிய-கங்கணம்-கடகத்தை-கட்டு-கட்டிய-அரனார்-பரமசிவன்-தந்த-பெற்ற-கந்தர்-கந்தஸ்வாமியும்-அழகர்- அழகையுடையவரும்- அத்தர்-பிதாவும்-இக்கு-கரும்புகள்- அங்கணம்- சேற்றினிடத்து கண்ட- உண்டாகப்பெற்ற-செய்-வயல்களையுடைய-செந்தில்-திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற-எங்காங்கெயர்- நம்முடைய காங்கேயருமாகிய முருகக்கடவுளானவர்-சாகரத்து-திருப்பாற்கடலிலே நித்திரைசெய்கின்ற-அரிக்கு-விஷ்ணுமூர்த்திக்கும்-அம்-அழகிய-கணங்கட்கு-தேவர் முதலிய கணங்களுக்கும்-அயனார்க்கு-பிரமதேவருக்கும் எழில்-அழகையுடைய-காசு-இரத்தினங்களால்-அணி-அலங்கரிக்கப்பட்ட- சேகரத்து-முடியையுடைய-அரிக்கு-இந்திரனுக்கும்-அங்கு-அவ்விடத்தே- அணங்கு-சூரன்முதலிய அசுரர்களாலுண்டாகிய வருத்தம்-அற்றிட-நீங்கும் பொருட்டு-கை-கையின்கண்ணே-சத்தி-வேலாயுதத்தை-தாங்கினர்-தரித்தருளினார். எ-று. காங்கேயரென்பது காங்கெயரெனக் குறுக்கல் விகாரம்பெற்று நின்றது. (௰௧)

சந்திக்கரத்தனைச்சேயங்கத்தினைத்தந்தனனற் *
சத்திக்கரத்தனைச்சிலையாளிதன்குளிளனைநே *
சத்திக்கரத்தனைகந்தியைத்தேத்தரன்றந்தகதிர்க் *
சத்திக்கரத்தனைசெந்திலாய்நின்சரண்சரணே. ௧௨

(இ-ள்.) சத்தி-வலிமையையுடைய-கரத்தன்-முதலையினது-அகம்-வயிற்றினுள்ளே புகுந்த-சேய்-பிராமணப்பிள்ளையினுடைய- அங்கத்தினை-உடம்பை-தந்தனன்-(சுந்தரமூர்த்திநாயனாருடைய திருப்பதிகத்தின்பொருட்டு) அழைத்துக் கொடுத்தவரும்-நல்- நன்மையாகிய-சத்திக்கு-(தமதிடப்பாதியிலிருக்கும்) உமாதேவிக்கு- அரத்தன்-(வலப்பாதியிலே) சிவந்தரூபமாக விளங்குகின்றவரும்- நகம்-மகாமேரு மலையை-சிலை- வில்லாக-ஆளி- ஆண்டவரும்-தம்-தம்முடைய-தாளிணை- இரண்டு பாதங்களையும்- நேசத்து- அன்பினை இக்கர்-கருப்புவில்லையுடைய மன்மதனுக்கு- அத்தன்-பிதாவாகிய விஷ்ணுமூர்த்தி-அகத்து-மனசிலே- இயைந்து-பொருந்தி- ஏத்து-துதிக்கின்ற-அரன்-சங்காரகர்த்தாவுமாகிய பரமசிவன்-தந்த- பெற்ற-கதிர்-கிரணத்தையுடைய-சத்தி-வேலாயுதத்தைத்தரித்த-கரத்து-கையினையுடைய-அனக- மலமற்றவரே-செந்திலாய்- திருச்செந்தூரையுடையவரே-நின்சரணே- உம்முடைய பாதங்களே-சரண்-எனக்குப் புகலிடம். எ-று. (௰௨)

சரிதங்கையாரக்கலன்றந்தனந்தரித்தார்நரகே *
சரிதங்கையாரக்கரிடந்தினார்தந்ததண்செந்திலே *
சரிதங்கையாரக்கணந்தின்னல்கைத்தல்சரதந்தஞ்சீர்ச் *
சரிதங்கையாரக்கசிந்திசைக்கின்றதகையினர்க்கே. *

(இ-ள்.) சரி-வளையலை-தங்கை-தமது கையிலும்-ஆரம்-முத்துமாலையாகிய-கலன்- ஆபரணத்தை- தந்தனம்-தமது முலையினும்-தரித்தார்-தரித்தவராகிய-நரகேசரி-நரசிங்கவுருவங்கொண்ட விஷ்ணுமூர்த்தியுடைய-தங்கையார்-தங்கையாராகிய உமாதேவியார் பொருந்திய-இடத்தினார்-வாமபாகத்தையுடையவராகிய-அக்கர்-சங்குமணியையணிந்த பரமசிவன்-தந்த-பெற்ற-தண்-குளிர்ச்சியையுடைய-செந்தில்-திருச்செந்தூரில் நேசர்-விருப்பத்தையுடைய முருகக்கடவுள்-இதம்-இன்பத்தை-கையார்-வெறுதுசெய்வார்-அக்கணத்து-அந்தக்ஷணத்திலே-இன்னல்-துன்பத்தை-கைத்தல்- வெறுத்தொழித்தல்-சரதம்-சத்தியம்.-தம்-தமது-சீர்-சிறப்பையுடைய-சரிதம்-சரித்திரத்தை: கை-ஒழுக்கம்-ஆர-பொருந்தும்படி-கசிந்து- மனங்கசிந்து-இசைக்கின்ற-சொல்கின்ற- தகையினர்க்கு- அன்பினையுடையவர்களுக்கு. எ-று. முருகக்கடவுள் அன்பினையுடையவர்களுக்கு இன்பத்தைச் செய்வார் துன்பத்தையொழித்தல் சத்தியமெனக் கூட்டுக. (௰௩)

இன்னந்தியங்கிநிகர்த்தசெங்கேழன்கைமீரண்டா *
யின்னந்தியங்கிரியைச்சிலையாக்கிதன்சேயெழிற்செய் *
யின்னந்தியங்கியிருங்கஞ்சஞ்சேர்செந்திலெந்தைதலை *
யின்னந்தியங்கிசையக்கதியீந்தனனென்றனக்கே. *

(இ-ள்.) இன்-இனிதாகிய-அந்தி-செவ்வானத்தையும்- அங்கி-அக்கினியையும்- நிகர்த்த-போன்ற- செங்கேழன்-செந்நிறத்தையுடையவராகியும்-கைமீரிரண்டு-நான்குகைகளையுடைய- ஆய்-மாதாவை-இல்- இல்லாத-நந்தி- நந்தியென்னுந் திருநாமத்தையுடையவரும்- அம்-அழகையுடைய-கிரியை-மகாமேருமலையை-சிலையாக்கிதன் -வில்லாக்கிக் கொண்டவருமாகிய பரமசிவனுடைய- சேய்-குமாரராகியும்- எழில்- அழகைப்பொருந்திய- செய்யின்- வயல்களிலே-நந்து- சங்குகள்- இயங்கி- ஊர்ந்து சென்று-இரும்- பெருமையாகிய-கஞ்சம்-தாமரைகளிலே-சேர்-பொருந்தியிருக்கப்பெற்ற-செந்தில்-திருச்செந்தூரில் வீற்றிருக்கும்-எந்தை-நமது பிதாவாகியிருக்கின்ற முருகக்கடவுளானவர்- தலையின்- பாசத்தினால்-நந்தி-கெட்டலைந்து-அங்கு-அந்தஸ்தலத்தின்கண்ணே- இசைய-சேர-என்றனக்கு-எனக்கு-கதி-மோக்ஷத்தை-ஈந்தனன்-தந்தருளினார். எ-று. (௰௪)

தனக்கடங்காரெயில்செற்றகங்காளன்றனயனங்கந் *
தனக்கடங்காதிழிதந்திக்கிளையன்றளிரெழிற்சந் *
தனக்கடங்காநிறைசெந்திலிற்செவ்வேள்சயிலநங்கை *
தனக்கடங்காணினச்சாரிலையண்ணறரணியிலே. *

(இ-ள்.) தனக்கு-தமக்கு-அடங்கார்-அமையாத அசுரர்களுடைய-எயில்-மும்மதில்களையும் செற்ற-அழித்த-கங்காளன்- முழுவெலும்பையணிந்த பரமசிவனுடைய-தனயன்-குமாரரும்- அம்-அழகைப்பொருந்திய-கந்தன்-கந்தஸ்வாமியும்-அ-அந்த-கடம்- மதமானது-காது-காதினின்றும்-இழி-சொரிகின்ற-தந்திக்கு-யானையாகிய விநாயகக் கடவுளுக்கு- இளையன்- தம்பியும்- தளிர்- தளிர்களைப் பொருந்திய-எழில்-அழகையுடைய-சந்தனம்-சந்தனமரங்களின்-கடம்-காடுகளும்-கா-பூஞ்சோலைகளும்- நிறை- நிறையப்பெற்ற-செந்திலில்-திருச்செந்தூரில்வீற்றிருக்கும்-செவ்வேள்-செவ்வேளென்னுந் திருநாமத்தையுடையவருமாகிய முருகக்கடவுளது-சயிலம்- மலையிலிருக்கின்ற-நங்கை-பெண்ணினுடைய-தனம்-தனமாகிய-கடம்-குடங்களை-

காணின்-காண்பாராயின்-நச்சார்- விரும்பாதார்-இலை இல்லை-அண்ணல்-தலைவனே-தரணியில்-இப்பூமியின்கண்ணே. எ-று. விரும்பாதார் பூமியின்கண்ணேயில்லையெனக்கூட்டுக. (௰௫)

தரணியனையநிறத்தண்ணலாரிரந்தன்றளந்த *
தரணியனயனிறைஞ்சயிலார்நற்றனிச்சிலையார்ந் *
தரணியனையனகனையந்தரிதந்திடுகந் *
தரணியனையனெஞ்சேயலர்த்தாள்கடரித்திறைஞ்சே *

(இ-ள்.) தரணியனைய- சூரியனைப்போன்ற- நிறத்து- நிறத்தையுடைய- அண்ணலார்- பெருமையிற் சிறந்தவராகியும்-அன்று-அக்காலத்தில்-இரந்து-யாசித்து- அளந்த-அளக்கப்பட்ட-தரணியன்-பூமியையுடைய விஷ்ணுமூர்த்தியும்-அயன்-பிரமதேவரும்-இறைஞ்சு-வணங்குகின்ற-அயிலார்- வேலாயுதத்தையுடையவராகியும்-நற்றனிச்சிலையாம்-நல்லஒப்பில்லாதவில்லாகிய-தரணியன்-மலையையுடையவரும்-ஐ- அழகினையுடைய- அனகன்- மலரகிதருமாகியபரமசிவனை-அணை-சேர்ந்த-அந்தரி-உமாதேவி-தந்திடு-பெற்றருளிய-கந்தர்-கந்தஸ்வாமியாகியுமிருக்கின்றமுருகக்கடவுளே-அணியல்-நமக்குப்பெருமைபொருந்தியஅரணாயிருக்கின்றார்- நெஞ்சே-மனமே- நையல்-நீ வருந்தாதே-அலர்த்தாள்கள்-அவருடைய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை-தரித்து-தாங்கி-இறைஞ்சு-வணங்கு. எ-று. அல்லென்பதுமதிநுக்குப்பெயராமாறு "இரவுமிருளுமிரும்பின் பெயரு-மெயினுமிரவியுமல்லெனலாகும்," என்னும்பிங்கலந்தைச்சூத்திரத்தால் உணர்க. (௰௬)

தரிக்கனந்தங்கலைநீள்சடைக்கைக்கனற்சங்கரனந் *
தரிக்கனந்தங்கலைநீதிகள்சாற்றரன்றந்தநற்கந் *
தரிக்கனந்தங்கலைநீர்ச்செய்க்கணுஞ்செர்திலார்தளையா *
தரிக்கனந்தங்கலைநீத்திழந்தேங்கரச்சங்கங்களே *

(இ-ள்.) தரிக்க-தன்னைச்சூடிக்கொண்டமாத்திரத்தில்-நந்து-ஆக்கம்பெற்ற-அம்-அழகிய-கலை- சந்திரகலையையுடைய-நீள்சடை-நீண்டசடையையும் கைக்கனல்-கையிலேபொருந்திய அக்கினியையுமுடைய-சங்கரன்-சங்கரரும்- அந்தரிக்கு-உமாதேவிக்கு- அனந்தங்கலைநீதிகள்-முடிவில்லாதசாத்திரமார்க்கங்களை-சாற்று-உபதேசித்த-அரன்-சங்கார கர்த்தாவுமாகிய பரமசிவன்- தந்த-பெற்ற-நற்கந்தர்-

நன்மையையுடையகந்தஸ்வாமியாகியும்-இக்கு-கரும்புகளானவை-அனம்-அன்னங்கள்-தங்கு-இருக்கின்ற-அலை-அலையையுடைய-நீர் ஜலம்பொருந்திய-செய்க்கண்-வயல்களிலே-ஆம்-உண்டாகப்பெற்ற-செந்திலார்-திருச்செந்தூரையுடையவராகியும்இருக்கின்றமுருகக்கடவுளுடைய-தளை-மாலையை-ஆதரிக்க-விரும்பினமாத்திரத்தில்-நந்தங்கலை-நம்முடையவஸ்திரத்தை-நீத்து-நீங்கி-கரச்சங்கங்கள்-கையிலிருந்தசங்கவளையல்களை-இழந்தேம்-இழந்தனம். எ-று. [முருகக்கடவுள்பவனிவருதல்கண்டுமால்கொண்டுவஸ்திரமும்வளையலுமிழந்துநின்றமகளிர்சொல்லியது.] (௧௭)

சங்கரியக்கநிகர்த்தநின்றாதைதகைபதென்னச் *
சங்கரியக்கரிறைஞ்செழிற்செந்திற்சடானனகஞ் *
சங்கரியச்கதிர்தானிசைகின்றசரணத்தினாற் *
சங்கரியக்கணத்தேயெற்செறியந்தகற்சினந்தே. *

(இ-ள்) சங்கரி-உமாதேவியுடைய-அக்கம்-கண்ணை-நிகர்த்த-போன்ற-நின்றாதை-உம்முடையபிதாவாகியபரமசிவனது-தகைய-தென்ன-செய்கையைப்போல-சங்கு-சங்கையுடைய-அரி-விஷ்ணுமூர்த்தியும்-யக்கர்-இயக்கர்களும்-இறைஞ்சு-வணங்குகின்ற-எழில்-அழகையுடைய-செந்தில்-திருச்செந்தூரில்வாழும்-சடானன-ஆறுதிருமுகங்களையுடையவரே-கஞ்சம்-தாமரைமலரும்-கரிய-கருகும்படியாக-கதிர்-ஒளி-இசைகின்ற-பொருந்துகின்ற-சரணத்தினால்-உம்முடையபாதத்தினால்-சங்கரி-கொன்றருளும்.- அச்கணத்தே-அந்தக்ஷணத்தே-எற்செற-என்னைச்சேரும்-அந்தகன்-இயமனை-சினந்து-கோபித்து. எ-று. இயமனைக்கோபித்துக்கொன்றருளுமெனக்கூட்டுக. (௧௮)

தகரனலங்கிறைநிறத்தான்செந்திற்றந்தைசங்கேய்ந் *
தகரனலங்கன்னளிறைதனத்தினன்றுமுளகந் *
தகரநலங்கடரநின்றசத்தியன்றுளெனினந் *
தகரனலங்கனன்றுலெனச்சீறிடத்தக்கரன்றே *

(இ-ள்.) தகரன்-மேடவாகனத்தையுடையவராகியும்-நல்-நன்மையாகிய-அங்கம்-திருமேனியிலே-நிறை-நிறைந்த-நிறத்தான்-வன்னத்தையுடையவராகியும்-செந்தில்- திருச்செந்தூரில்வாழும்-தந்தை-பிதாவாகியும்-சங்கு-சங்கு-எய்ந்த-பொருந்திய-கரன்-கையையுடைய விஷ்ணுமூர்த்தியும்-அல்-இருள்போலும்-அங்கன்-சரீரத்தையுடை

யதேவேந்திரனும்-நளினதனத்தினன்-தாமரையாசனத்தினையுடைய பிரமதேவரும்-தாழ் -வணங்குகின்ற-அளகம்- அளகமானது-தகரம்-மயிர்ச்சாந்தாலாகிய-நலங்கள்-இன்பத்தை-தர-தரும்படி-நின்ற-நின்ற-சத்தியன்- கிரியாசத்தியாகிய தெய்வயானையையுடையவராகியுமிருக்கின்ற கந்தஸ்வாமியினுடைய- தாளெனின்- பாதமென்பேனுயின்-அந்தகர்-யமனர்-அனலம்- வடவாமுகாக்கினி-கனன்றுலென-சுவாலித்தாற்போல-சீறிட- கோபிப்பதற்கு-தக்கரன்று- தக்கவரல்லர். எ-று. (௰௯)

தக்கனகத்தினடறணித்தானயன்றன்கதிசந் *
தக்கனகத்திகிரிக்கரனுக்கங்கடந்தளிக்கத் *
தக்கனகத்தியனையாளியென்னெஞ்சதாஞ்சலசந் *
தக்கனகத்தினகரன்றன்செந்திலைச்சந்திக்கினே *

(இ-ள்.) தக்கன்-தக்கனுடைய-அகத்தின்- அகங்காரத்தினது-அடல்- வலிமையை- தணித்தான்- அடக்கிய உருத்திரமூர்த்தியுடைய-(கதி)-பதத்தையும்-அயன்றன்- பிரமனுடைய-கதி-பதத்தையும்-சந்தம்-அழகினையுடைய-கனகம்-பொன்மயமாகிய-திகிரி-சக்கரத்தைத்தரித்த-கரன்- கையையுடைய விஷ்ணுவினது- ஆக்கங்கள்- செல்வத்தையும்-தந்து-தந்து-அளிக்க-காக்க-தக்கன்-தக்கவர்-அகத்தியனை-அகஸ்தியமகாமுனிவரை-ஆளி-ஆண்டருளினவரும்- என்னெஞ்சதாம்-என்னிதயமாகிய-சலசம்-தாமரைமலருக்கு- தக்கன்-அன்பராகிநகு-விளங்குகின்ற-அத்தினகரன்-அந்தஞானசூரியருமாகிய-முருகக்கடவுளானவர்- தன்-தம்முடைய-செந்திலை-திருச்செந்தூரை-சந்திக்கில்-சந்திக்கில். எ-று. முருகக்கடவுளானவர் தம்முடைய திருச்செந்தூரைச்சந்திக்கில் உருத்திரமூர்த்தியினுடைய பதத்தையும் பிரமனுடைய பதத்தையும் விஷ்ணுவினுடைய செல்வத்தையும் தந்து காக்கத்தக்கவரெனக் கூட்டுக. (௨௰)

சந்தத்தனத்திகடந்திறத்தாசைதலத்தினிச்சை *
சந்தத்தனத்தினன்சதிரடியன்றனதிவிற்சேர் *
சந்தத்தனத்தியதளான்றனயதடக்கயல்கஞ் *
சந்தத்தனத்தினினங்கீழிழிசெந்திற்றங்கினற்கே. *

(இ-ள்.) சந்தம்-சந்தனத்தையணிந்த-தனத்திகடம்- தனத்தையு

டைய பெண்களது-சிறந்த- காரணத்தாலாகிய- ஆசை-ஆசையையும்-தலத்தில்-மண்ணில்வைக்கப்படும்- இச்சை-ஆசையையும்-சந்தம்-அழகையுடைய-தனத்தின்-பொன்னிலேறும்- நசை-ஆசையையும்-தீர்-தீர்த்தருளும்.-அடியன்றனது-தமதடியாராகிய சுந்தரமூர்த்திநாயனாருடைய-இல்-மனைவியாகிய பரவையினது-இல்-வீட்டிலே-சந்தூ-தூதாக-சேர்-சென்ற-அத்தன்-பிதாவும்-அத்தி-யானையினது-அதளான்- தோலையுடையவருமாகிய பரமசிவனுடைய- தனய-குமாரரே-தடக்கயல்-பெரியகயன்மச்சங்கள்-கஞ்சம்- தாமரைமலரிலே-தித்த-பாய-நத்தினினம்-(அதிலேயேற்றுகின்ற) சங்குக்கூட்டங்கள்-கீழ்-கீழே-இழி-இறங்கப்பெற்ற-செந்தில்- உம்முடைய திருச்செந்தூரிலே-தங்கினற்கு-வந்துவசித்த எனக்கு. எ-று. பரமசிவனுடைய குமாரரே எனக்குப் பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும் மண்ணில்வைக்கப்படுமாசையையும் பொன்னிலேறும் ஆசையையும் தீர்த்தருளுமெனக் கூட்டுக. (௨௧)

தங்கச்சினகரநேராக்கலந்திச்சகநிறைந்தார் *
தங்கச்சிநகரநேயர்தனயன்றனக்கினிதாந் *
தங்கச்சினக-நீள்செந்திநாட்டிற்றனகரிதந் *
தங்கச்சினகரநற்கனனென்னங்கடையலர்க்கே *

(இ-ள்.) தங்கு-பொருந்திய- அச்சின்- உயிரெழுத்துக்களுக்குள்ளே-அகரம்-அகரமாகிய அக்கரத்தை-நேரா- போன்று-கலந்து-உயிர்கள்தோறும் பொருந்தி-இச்சகம்-இவ்வுலகத்திலே-நிறைந்தார்-வியாபித்தவரும்-தம்- தம்முடைய-கச்சிநகரம்-காஞ்சீபுரத்தில்-நேயர்-விருப்பத்தையுடையவருமாகிய பரமசிவனுடைய தனயன்றனக்கு-குமாரராகிய முருகக்கடவுளுக்கு- இனிதாம்-இனியதாகிய- தங்கம்-பொன்னாலாய-சினகரம் கோயிலானது-நீள்- உயர்ந்திருக்கப்பெற்ற-செந்தில்-திருச்செந்தூரைத் தன்னிடத்துடைய-நாட்டில்-நாட்டின்கண்ணே-கரிதந்தம்-யானைக்கோட்டைப்போலும்-தனம்-தனங்கள்-கச்சில்-கச்சுள்ளே நின்றும்-நகர- பிதுங்குதற்கு- நற்கனன்-நல்லகனம் என்-யாதுகாரணத்தாலுண்டாயது- நங்கள்-எங்களுடைய-தையலர்க்கு-பெண்ணுக்கு. எ-று. பாங்கியே நீசொல்லென்பது எஞ்சிநின்றது. [செவிலி தலைவியினது முலையிறுமாப்பைக்கண்டையுற்றுப் பாங்கியை வினவல்.] (௨௨)

அலரிநனந்தலையாழிகண்டாங்குச்சிகியினிடை *
யலரினனந்தநிகராயிலான்செந்திலாயிழையை *
யலரினனந்தநினைநிலந்தேர்ந்ததற்கன்றயலா *
ரலரினனந்தஞ்சொலற்கிடனாநெஞ்சழிகின்றதே *

(இ-ள்.) ஆழி-சமுத்திரத்தினது-நனந்தலை-நடுவிலே-அலரி-சூரியன்-கண்டாங்கு-தோன்றினாற்போல-சிகியினிடை-மயில்வாகனத்திலே-அலர்-விளங்குகின்ற இனன்-தலைவரும்-அந்தம்-அழகிய-நிகர்-ஒளிபொருந்திய-அயிலான்-வேலாயுதத்தையுடையவருமாகிய முருகக்கடவுளது-செந்தில்-திருச்செந்தூரிலிருக்கும்-ஆயிழை-பெண்ணுக்கு-ஐபலர்-ஐந்து பக்ஷிபாணங்களாலாகிய-இனல்-துன்பம்-நந்த-கெடும்படி-நினை-உன்னை-நிலம்-இந்நாட்டின்கண்ணே-தேர்ந்ததற்கு-தேடியதற்கு-அன்று-அந்நாளிலே-அயலார்-அயலவர்கள்-அலரின்-பழிமொழியாக அநந்தம்-அளவில்லாதவார்த்தைகளை-சொலற்கு-பேசுதலுக்கு-இடனா-இடமாக-நெஞ்சு-மனம்-அழிகின்றது-வருந்துகின்றது. எ-று. [அலரறிவுறுத்தல்.] (௨௩)

தேயத்தியங்கியலகிறலங்களிற்சென்றடிக் *
டேயத்தியங்கியலையாதிடங்கதிசேர்தலறைந் *
தேயத்தியங்கினநித்திலந்தானெறிசெந்திலடைந் *
தேயத்தியங்கிதரித்தான்றனயற்றெரிசிக்கினே *

(இ-ள்.) தேயத்து-தேசங்கள்தோறும்-இயங்கி-சஞ்சரித்து-அலகில்-அளவில்லாத-தலங்களில்-சேத்திரங்களிலே-சென்று-போய்-அடிகள்-கால்கள்-தேய-தேயும்படி-தியங்கி-தியங்கி-அலையல் அலையாதே-கதி-மோக்ஷத்தை-சேர்தல்-அடைதல்-திடம்-நிச்சயம்-அறைந்து-ஆரவாரித்து-அத்தி-சமுத்திரமானது-அங்கு அவ்விடத்தில்-இனம்-கூட்டமாகிய-நித்திலம்-முத்துக்களை-எறி-கரையிலெறியப்பெற்ற-செந்தில்-திருச்செந்தூரை-அடைந்து-சேர்ந்து-ஏய்-அவ்விடத்திலிருக்கின்ற-அத்தி-எலும்பையும்-அங்கி-அக்கினியையும்-தரித்தான்-தரித்தபரமசிவனுடைய-தனயன்-குமாரராகிய முருகக்கடவுளை-தெரிசிக்கின்-தரிசிக்கில். எ-று. முருகக்கடவுளைத் தரிசிக்கில் மோக்ஷத்தையடைதல் நிச்சயமெனக் கூட்டுக. மூன்றாமடியின் முதலிலிருக்கும் ஏகாரம் அசைநிலை. (௨௪)

சிக்கத்தனங்கிடறக்கின்றகன்னியர்சிந்தைநேசக் *
சிக்கத்தனங்களளித்தழிந்தேற்கெழிற்செந்திறரி *
சிக்கத்தனங்கழலையேத்தநல்கினன்சீர்நிறைகா *
சிக்கத்தனங்களகிலேசன்றந்ததிறற்கந்தனே *

(இ-ள்.) சிக்க-கண்டவர்கள் தங்களிடத்தில் அகப்படும்படி-தனங்கள்-முலைகளை-திறக்கின்ற-திறவாநின்ற-கன்னியர்-பெண்களுடைய-சிந்தைகள்-மனம்-நேசக்க-விரும்பும்பொருட்டு-தனங்கள்-திரவியங்களை-அளித்து-அவர்களுக்குக்கொடுத்து- அழிந்தேற்கு-கெட்டவனாகிய எனக்கு-எழில்-அழகையுடைய-செந்தில்- திருச்செந்தூரை-தரிசிக்க-தரிசிப்பதற்கும்-தன்-தம்முடைய- அங்கழலை-அழகியபாதத்தை-ஏத்த- துதிப்பதற்கும்- நல்கினன்-அருள்செய்தார்- சீர்நிறை-சிறப்புப்பொருந்திய-காசி-காசியில்வீற்றிருக்கும்-கத்தன்-கருத்தாவாகிய-நங்களகிலேசன்-எங்கள் விசுவநாதஸ்வாமி-தந்த-பெற்ற-திறல்-வலிமையையுடைய-கந்தன்-கந்தஸ்வாமியானவர். எ-று. கந்தஸ்வாமியானவர் எனக்குத் திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும் தம்முடைய பாதத்தைத் துதிப்பதற்கும் அருள்செய்தாரெனக்கூட்டுக. ௨௫

கந்தரங்கானந்தனிற்சென்றடங்கிலென்காசிக்கநே *
கந்தரங்கானந்தநண்ணிலென்கன்னியர்கட்டளக *
கந்தரங்கானந்தநின்றுடெழிற்செந்திற்கண்டிறைஞ்சிக் *
கந்தரங்கானந்தநல்கச்சனனங்கடந்திலரே *

(இ-ள்.) கந்தரம்-முழையிலும்-கானந்தனில்-காட்டிலும்-சென்று-போய்-அடங்கில்- புலனொடுங்கியிருந்ததனால்- என்-பயன்யாது-காசிக்கு-காசிக்கு-அநேகந்தரம்-அநேகமுறை-கால்-கால்கள்-நந்த-வருந்தும்படி-நண்ணில்-போனதினால்-என்-பயன்யாது-கன்னியர்-பெண்கள்-கந்தரம்-மேகம்போலும் நிறத்தையுடைய-கட்டு-கட்டப்பட்ட-அளகம்-அளகத்திலே-கான்-வாசம்-நந்த-மிக-நின்று-நின்று-ஆடு-நடிக்கின்ற எழில்-அழகையுடைய-செந்தில்-திருச்செந்தூரை-கண்டு-தரிசித்து-இறைஞ்சி-வணங்கி-கந்தர்-முருகக்கடவுள்-அங்கு-அவ்விடத்தில்-ஆனந்தம்-சிவானந்தத்தை-நல்க- அருள-சனனம்-அதனாலே தங்கள் பிறவியை- கடந்திலர்- நீங்காதவர்கள்- எ-று. சிவானந்தம்போற்கர்மயோகங்கள் பயன்படாவென்பதுகருத்து. (௨௬)

கடநந்திகைத்ததளாடையவெனைக்காக்கநிற்கே *
கடனந்திநாணிறத்தாயெனநாரணன்கண்டிறைஞ்செங் *
கடநந்திநாதன்றனயனற்செந்திலிற்காரிகையே *
கடனந்தியைகங்காதலர்தேரிற்கலிக்கின்றதே *

(இ-ள்.) கடம்-மதம்-நந்து- கெடுதல்-இல்-இல்லாத- நாகத்து-யானையினது-அதள்-தோலாகிய-ஆடைய-வஸ்திரத்தையுடையவரே-எனை-அடியேனை-காக்கல்-இரட்சித்தல்- நிற்கே-உமக்கே-கடன்-கடனும்-அந்தி-செக்கர்மேகம்-நாண்-நாணத்தக்க-நிறத்தாய்-செந்நிறத்தையுடையவரே-என-என்று-நாரணன்-விஷ்ணுமூர்த்தி-கண்டு-தரிசித்து-இறைஞ்சு-வணங்குகின்ற-எங்கடம்-எங்களுடைய-நந்தி-நந்தியென்னும் பெயரைப்பொருந்திய-நாதன்- பரமசிவனுடைய-தனயன்-குமாரராகிய முருகக்கடவுளது-நற்செந்திலில்- நன்மையாகிய திருச்செந்தூரிலிருக்கும்-காரிகையே-பெண்ணே- கடல்-சமுத்திரத்திலே தோன்றிய-நந்தின்-சங்குகளினுடைய-நாயகம்-நாயகமாகிய வலம்புரி-காதலர்-உன்னுடைய தலைவரினது-தேரில் தேரிலே-கலிக்கின்றது-சத்திக்கின்றது. எ-று. [பாங்கி வலம்புரிகேட்டுத் தலைவனது வரவறிவுறுத்தல்.] (உஎ)

கணக்காகநாய்கடின்காயநிலையெனக்கண்ணியென்ன *
கணக்காகநானலைந்தெய்த்தேனெழிற்செந்திற்கந்தநெற்றிக் *
கணக்காகனார்தந்தநின்றனையேயினிக்காதலினாற் *
கணக்காகனாநிகர்த்தேயழியங்கத்தின்காதலற்றே *

(இ-ள்.) கணம்- கூட்டமாகிய- காகம்- காகங்களும்- நாய்கள்-நாய்களும்- தின்- உண்கின்ற- காயம்-சரீரத்தை- நிலையென-நித்தியமென்று- கண்ணி-நினைத்து- என்னகணக்காக- என்னதாற்பரியத்தின்பொருட்டு- நான்-யான்-அலைந்து-அலைந்து- எய்த்தேன்-இளைத்தேன்.-எழில்-அழகையுடைய-செந்தில்-திருச்செந்தூரில் வீற்றிருக்கும்-கந்த-கந்தஸ்வாமீ-நெற்றிக்கண்-நெற்றிக்கண்ணையும்-அக்கு-எலும்புமணியைத்தரித்த-ஆகனார்- திருமேனியையுடைய பரமசிவன்-தந்த-பெற்ற-நின்றனையே- உம்மையே- இனி-இனி-காதலினால்-விருப்பத்தினால்-கண-தியானிக்கும்பொருட்டு-கா-இடையூறுவராமற் காத்தருளும்-கனா- சொப்பனத்தை-நிகர்த்து-போன்று- அழி-அழிகின்ற- அங்கத்தில்-சரீரத்தில் வைத்த-காதல்- விருப்பம்-அற்று-நீ

ங்கி. எ-று. ❁ கண்ண என்றது கண என இடைக்குறைந்து நின்றது. சரீரத்தில்வைத்த விருப்பம் நீங்கி உம்மையே தியானிக்கும்பொருட்டுக் காத்தருளும் எனக்கூட்டுக. (௨௮)

காதலையானின்றனக்காக்கினனினிக்காயந்தந்தே ❁
காதலையானின்றனக்காரணனடிக்கஞ்சங்கணீங் ❁
காதலையானின்றகங்கரைந்தேத்தரன்கண்ணியராக் ❁
காதலையானின்றசங்கரன்சேய்செந்திற்காங்கெயனே. ❁

(இ-ள்.) காதலை-விருப்பத்தை-யான்-நான்-நின்றனக்காக்கினன்-உம்மேல்வைத்தேன்-இனி-இனி-காயம்-சரீரத்தை-தந்து-படைத்து-காதல்-கொல்லாதொழியும்-ஐயான்-சூக்குமரூபியும்-இன்-இனிமையாகிய-தனம்-அருட்செல்வத்துக்கு-காரணன்-காரணரும்- அடி-தம்முடையபாதமாகிய-கஞ்சங்கள்-தாமரைமலர்களை-நீங்காது-நீங்காமல்-அலையான்-திருப்பாற்கடலிலே நித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்தி-நின்று-முன்னின்று-அகம்-மனம்-கரைந்து-உருகி-ஏத்து-துதிக்கப்பெற்ற-அரன்-சங்காரகர்த்தாவும்-கண்ணி-மாலையாக-அரா-சர்ப்பம்-காது-காதுகளிலே-அலையா நின்ற-அசைகின்ற-சங்கரன்-சுகஞ்செய்பவருமாகியபரமசிவனுடைய-சேய்-குமாரரே-செந்தில்-திருச்செந்தூரிலிருக்கின்ற-காங்கெயனே- கங்காபுத்திரரே. எ-று. ❁ சனனமரண துக்கங்களை நீக்கி நித்தியபேரின்பமயமாகிய மோக்ஷத்தைத் தந்தருளும் என்பது கருத்து. (௨௯)

காயங்கலையநலியந்தகனணைகாலஞ்செய்ய ❁
காயங்கலையதளானிலநீரழல்காற்றெழிலா ❁
காயங்கலையனலரிசித்தாயினன்காதலழ ❁
காயங்கலையதிருஞ்செந்திலாயென்குகன்றநெஞ்சே. ❁

(இ-ள்.) காயம்-சரீரம்-கலைய- நீங்கும்படி-நலி- வருத்துகின்ற-அந்தகன்-இயமன்-அணை-வரும்-காலம்-காலத்திலே-செய்யகாயம்-சாக்கியநாயனாரெறிந்த செங்கல்லாலாகியசிவந்ததழும்பையும்-கலை-கலைமானினது-அதளான்-தோலையுமுடையவராகியும்- நிலம்-பிருதிவியும்-நீர்-அப்புவும்-அழல்-தேயுவும்-காற்று-வாயுவும்-எழில்-அழகையுடைய-ஆகாயம்- ஆகாசமும்-கலையன்-சந்திரனும்-அலரி-சூரியனும்-சித்து-ஆன்மாவும்- ஆயினன்- ஆனவராகியுமிருக்கின்ற பரமசி

வனுடைய-காதல்-குமாரராகிய முருகக்கடவுளினது- அழகு-திருவு ருவத்தை-ஆய்-தியானி-அங்கு-அவ்விடத்தே- அலை-சமுத்திரம்-அதி ரும்-ஒலிக்கின்ற செந்திலாய்- திருச்செந்தூரையுடையவரே-என்க= என்று சொல்லு-கன்றல்- வருந்தாதொழி- நெஞ்சே- என்மனமே.

எ - று. ❁ என்மனமே இயமன்வருங்காலத்திலே வருந்தாதொழி முருகக்கடவுளினது திருவுருவத்தைத் தியானி திருச்செந்தூரை உடையவரே என்று சொல்லு எனக்கூட்டுக. சீராந்தியத்திலே மனமானது எப்பொருளின்மேல சிந்தனைவைத்ததோ அப்பொருளே கைகூடும் என்பது சாத்திரசித்தம் ஆதலால், இப்படிச் சொன்னார் எக்காலத்திலும் இடைவிடாமல் வைத்த சிந்தனை எதுவோ அதுவே சீராந்தியத்திலும் வருவது ஆகையால், முருகக்கடவுளைத் தியானித்தலை எக்காலத்திலும் இடைவிடாது செய்தாலொழியச் சீராந்தியத்திலே செய்தல் கூடாது எனவும், அதனால் எப்பொழுதுந் தியானிக்கவேண்டும் எனவும், அறிந்துகொள்க. (௩௰)

திருச்செந்திநிரோட்டகயமகவந்தாதி

மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

☞ இப்பிரபந்தத்திலே நகரம்வரவேண்டிய சில இடங்களிலே யமகம் நோக்கி னகரம் வந்திருக்கின்றது. பிறசான்றோர் செய்யுள்களிலும் இப்படி வருதல் காண்க.

திருச்சிற்றம்பலம்.